**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

Case No.CC.29/2023

| Deposition of Name | லோகநாதன் Rtd.SI | Prosecution | LW-9 as PW-7 |
|---|---|---|---|
| Father Name | குஞ்சிநாயக்கர் | Defence | |
| முகவரி | புத்தூர் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 61/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **14.10.2025 எதிரி ஆஜர் சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் பொறையார் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 2024 ம் ஆண்டு பணி ஓய்வு பெற்று மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். வழக்கு சமயத்தில் நான் புதுப்பட்டினம் காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது என்னுடன் பணிபுரிந்த சிறப்பு உதவி ஆய்வாளர் சேகர் என்பவரின் கையொப்பமும், கையெழுத்தும் நான் நன்கு அறிவேன். ஆவணங்களின் அடிப்படையில் அவருக்காகவும் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 05.04.2022 ம் தேதி காலை 10.00 மணிக்கு சி றப்பு உதவி ஆய்வாளர் சேகர் நிலைய பொறுப்பில் இருந்த போது மகேந்தி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று புதுப்பட்டினம் காவல்நிலைய குற்ற எண்.64/2022 இதச பிரிவுகள் 294b, 506(i) r/w.4of TNPHW Act கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். **அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

வழக்கு கோப்புகளை மேல் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார். வழக்கு கோப்புகளை விசாணைக்கு எடுத்துக்கொண்டு நான் அன்றைய தினமே காலை 11.00 இடம் சென்று சாட்சிகள் கோவிந்தசாமி மற்றும் அண்ணாதுரை முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மேற்படி ஆவண்ங்கள் ஆ.சா.ஆ.3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர்** பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு

செய்தேன். வழக்கின் எதிரியை தேடிய நிலையில் அன்றைய தினமே 12.30 மணிக்கு புதுப்பட்டினம் கடைத்தெரு அருகே நின்றிருந்தவரை குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

பின்னர் கடந்த 05.04.2022 ஆம் தேதி இந்த வழக்கு விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 294b, 506(i) r/w.4of TNPHW Act கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் .

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த புகாரை அசா.1 எழுதி எடுத்துவந்தாரா அல்லது காவல் துறையில் வைத்து எழுதப்பட்டதா என்றால் எதிரி எடுத்துவந்தார். அந்த புகாரினை யார் எழுதினார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கின் சம்பவத்தன்று (17.03.2022 ம் தேதி) எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 16 நாட்கள் (05.04.2022) தாமதமாக புகார் கொடுக்கபட்டது என்றால் சரிதான். மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலரிடம் அசா.1 ஆல் கொடுக்கப்பட்ட எ ந்த புகாரும் எங்கள் காவல் நிலையத்திற்கு வரவில்லை என்றால் சரிதான். அப்படி ஒரு புகார் கொடுக்கப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் அசா.1 யும் எதிரியும் செல்போனில் பேசிய ஆடியோ பதிவுகளை அசா.1 என்னிடம் சமர்பிக்கவில்லை என்றால் சரிதான்.

இந்த வழக்கில் அசா.1 ன் மகளிடம் எதிரி செல்போனில் பேசியுள்ளார் என்று புகாரில் சொல்லப்பட்டுள்ளது என்றால் அசா.1 ன் மகளை சாட்சியாக சேர்த்துள்னேனா என்றால் சேர்த்துள்ளேன். எங்கள் வரைபடத்தில் சபரி நாதன் மற்றும் அன்புச்செல்வன் இவர்களை தவிர வரைபடத்தில் உள்ள மற்றவர்களை சாட்சியாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். பார்வை மகசர் சாட்சிகளான கோவிந்த சாமி மற்றும் அண்ணாதுரை ஆகியோர்கள் சம்பவம் நடைபெற்ற இடத்தில் அவர்களுக்கு வீடுகள் கிடையாது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து 7 கிமீ துாரத்திற்கு பிறகு தான் பார்வை மகசர் சாட்சிகள் வீடு உள்ளது என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் பார்வை மகசர் வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. புகாரில் கூறியபடி எதிரி மந்திரவாதியை அறிமுகப்படுத்தி பிரச்சனையை தீர்ப்பதாக கூறியதால்

மந்திரவாதியை பற்றி அசா.1 யிடம் விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. உண்மையிலேயே அப்படி ஒரு சம்பவம் நடந்தது என்றால் 17.03.2022 அன்றே புகார் கொடுத்து இருப்பார்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் அசா.1 க்கும் பணம் கொடுக்கல் வாங்கள் இருந்தது என்றால் சரியல்ல. எதிரி தான் அண்ணன் மணி மற்றும் சாதிக் ஆகியோர்கள் மீது அசா.1யிடம் எதிரி பணம் வாங்கியுள்ளார் என்றாலும் அந்த பணத்தை எதிரி கேட்டபோது பணம் கொடுக்க முடியாது என்று கூறியதால் 16 நாட்கள் தாமதாமாக பொய்யான புகாரை காவல் நிலையத்தில் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

பணம் கொடுத்து சம்பந்தமாக ஆஜர் எதிரி அசா.1 ன் கணவர் அசா.2 செல்வத்திடம் சொல்ல அவர்களுக்குள் ஏற்பட்ட பிரச்சனையால் எதிரி மீது பொய்யான புகாரை 16 நாட்கள் காலதாமதமாக கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அசா.1க்கும் எதிரிக்கும் பணம் வாங்கள் கொடுக்கல் சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சனையை பயன்படுத்திக்கொண்டு எதிரிக்கு பணம் கொடுக்காமல் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் அந்த பொய்யான புகாரை நான் பெற்று எதிரி மீது பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறுவிசாரணை இல்லை.**